**செய்தி வெளியீடு எண்:617** **நாள்: 20.09.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (20.9.2017) நாகப்பட்டினத்தில் நடைபெற்ற புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை**

இன்றைக்கு தமிழக மக்கள் மனதிலே நீக்கமற இடம்பெற்றவரும், ஒன்றரை கோடி தொண்டர்களின் உயிர் மூச்சாக விளங்கி, இன்றைக்கு தமிழக மக்களின் நெஞ்சங்களில் நீக்கமற இடம்பெற்றிருக்கின்ற, நம்மிடத்திலிருந்து மறைந்த, மனதில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

எல்லோருக்கும் நல்லவர் – ஏழைகளுக்குத் தெய்வம்,
திக்கற்றவர்களுக்கு வழிகாட்டி, திறமையானவர்களுக்கு ஏணி,
உழைப்பாளர்களுக்கு உந்துதல்,
பெண்களை பேணிக்காத்த பொன்மனச் செம்மல்,
இளைஞர்களைத் தட்டி எழுப்பி
இமயத்தில் ஏற வைத்த இணையற்ற தலைவர்
மாண்புமிகு புரட்சித் தலைவர்
டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின்
நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு
பல கோடி ரூபாய் மதிப்பிலான
திட்டங்களை உங்களுக்கு வழங்க வந்திருப்பதில் நான் பெருமகிழ்ச்சியும்
பெருமையும் அடைகின்றேன்.

தலைமையுரை ஆற்றிய
மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர்
திரு. **தனபால்** அவர்களே!

இந்த இனிய விழாவில்
சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர்
டாக்டர் **தம்பிதுரை** அவர்களே!

மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு.**ஓ.பன்னீர்செல்வம்** அவர்களே!

முன்னிலையுரை ஆற்றிய
மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. **ஓ.எஸ். மணியன்** அவர்களே!

வரவேற்புரையாற்றிய
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு.வெங்கடேசன், இ.ஆ.ப.,
அவர்களே!

வாழ்த்துரை வழங்கிய
நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. **கே.கோபால்** அவர்களே!
மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர்
திரு.**ஆர்.கே.பாரதிமோகன்** அவர்களே!

பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர்
திரு. **எஸ்.பவுன்ராஜ்** அவர்களே!
சீர்காழி சட்டமன்ற உறுப்பினர்
திரு.**பி.வி.பாரதி** அவர்களே!

மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர்
திரு. **வி.ராதாகிருஷ்ணன்** அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,

மாண்புமிகு சட்டப்பேரவை துணைத்தலைவர்
திரு.**பொள்ளாச்சி ஜெயராமன்** அவர்களே!

அரசு தலைமைக் கொறடா
திரு. **இராஜேந்திரன்** அவர்களே!

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர்
திருமதி **பா.வளர்மதி** அவர்களே**!**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர்
திரு. **பி.கே.வைரமுத்து** அவர்களே**!**

நன்றியுரை ஆற்ற உள்ள
நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர்
முனைவர் **எஸ்.சுரேஷ் குமார்** அவர்களே!
விழாவிற்கு வருகை தந்திருக்கும்
நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே,

தலைமைக்கழக நிர்வாகிகளே,

முன்னாள் அமைச்சர் பெருமக்களே!
முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!
கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே!
முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற
கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே!
பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!
வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!
இளைஞர்களே! மாணவ மாணவிகளே!
நலத்திட்டப் பயனாளிகளே!
உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

வீரம், விவேகம், மொழிப்பற்று,
தேசப்பற்று, ஆன்மீகம், சமய நல்லிணக்கம்,
இயல், இசை, நாட்டியம்,
விவசாயம், மீன்வளம்,
என பன்முக ஆற்றல் கொண்ட
ஒரு வண்ணமிகு மாவட்டம்
நாகை மாவட்டமாகும்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதன்முதலாக
பொறுப்பேற்றுக்கொண்டபிறகு
1991–ஆம் ஆண்டு அக்டோபர் 18ஆம் நாள்
புதியதாக உருவாக்கிய மாவட்டம்தான்
இந்த நாகை மாவட்டம்.

நாகப்பட்டினம் முற்கால சோழர்களின்
பன்னாட்டு வணிக மையமாகவும்,
சிறந்த துறைமுகமாகவும் விளங்கியது.

அதிகமான கப்பல்கள் வந்து செல்வதால்
சங்க கால தமிழர் நாவாய் என்னும் கப்பல்களை
பயன்படுத்தி வெளிநாடுகளுக்குச் சென்று
வாணிபம் செய்தனர்.

இதனால் இந்த ஊரினை நாவல்பட்டினம்
என்று அழைத்தார்கள். இதுதான் பின்னாளில் நாகப்பட்டினம் என்று மருவியது.

இதே நாகை மாவட்டத்தில்
காவிரிபூம்பட்டினம் என்ற பூம்புகார் துறைமுகமும் பன்னாட்டு வணிக மையமாக திகழ்ந்தது.

கவிச்சக்கரவர்த்தி கம்பர் பிறந்த தேரழுந்தூர்
நாகை மாவட்டத்தில் உள்ளது.
சைவ சமய குரவர்களின் ஒருவரான
திருஞான சம்பந்தர் அவதரித்த சீர்காழி தலம்
இந்த மாவட்டத்தில்தான் உள்ளது.

தமிழிசை மூவர் என்று இசை உலகமும்
இலக்கிய உலகமும் போற்றும்
சீர்காழி அருணாசலக் கவிராயர்,
முத்துத்தாண்டவர்,
மாரிமுத்தாப்பிள்ளை ஆகிய மூவரும்
வாழ்ந்ததும் சீர்காழியில் தான்.

தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை
மறைமலை அடிகளார் பிறந்த மாவட்டம் இது.

தமிழில் புதின இலக்கியத்தை முதன்முதலில் அறிமுகம் செய்த நீதியரசர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் பிறந்த மாவட்டம் இது.

குலோத்துங்கன் ஒரு ஊரையே பரிசாக அளித்த புலவன் ஒட்டக்கூத்தர் பிறந்த மலரி என்ற ஊர்
நாகை மாவட்டத்தில் உள்ளது. பரிசாகப் பெற்ற ஊர் ஒட்டக் கூத்தர் பெயரால் ‘கூத்தனூர்’ என்று
இன்று அழைக்கப்படுகின்றது.
நமக்குப் பெருமை.

டச்சுக்காரர்களால் வணிகத்தின் பொருட்டு முதன்முதலாக வந்து டேனிஷ் கோட்டை அமைத்ததும், முதல் அச்சுக்கூடம்
அமைத்ததுமான தரங்கம்பாடி இந்த மாவட்டத்தில்தான் உள்ளது.

தென்னாப்பிரிக்காவில் தேசப்பிதா
மகாத்மா காந்தியடிகளுடன் போராட்டங்கள்

மேற்கொண்ட தில்லையாடி வள்ளியம்மை
பிறந்த தில்லையாடி  இந்த மாவட்டத்தில்தான் உள்ளது.
இங்கு அவருக்கு நினைவு மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது.

'ஆயிரம் ஆனாலும் மாயூரம் ஆகாது' என்ற  பழமொழியுடன் சிறப்புற்று விளங்கும்
ஆன்மீக நகரமாக திகழும் மாயூரம்
இந்த மாவட்டத்தில்தான் உள்ளது.

அதற்கு காரணம் ஆயிரம் வருடங்கள்
கங்கையில் தினம் தினம் நீராடினால் கிடைக்கும் புண்ணியம்  ஐப்பசி மாதத்தில் மாயவரம்
துலா கட்ட காவேரியில் புனித நீராடினால்
புண்ணியம் கிடைக்கும் என்பது ஐதீகம்.

144 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும்
காவேரி புஷ்கரணி விழா,
இந்த ஆண்டு செப்டம்பர் 12 ஆம் தேதியன்று தொடங்கியுள்ளதையும், அங்கு பக்தர்கள்
புனித நீராட  அனைத்து வசதிகளையும்,  உதவிகளையும் தமிழ் நாடு அரசு
செய்துள்ளது  என்பதையும் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

மகாத்மா காந்தியடிகள் – உப்பு சத்தியாகிரகம்
செய்ய தண்டி யாத்திரை தொடங்கிய போது,
மூதறிஞர் ராஜாஜி தலைமையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்குபெற்ற
உப்பு சத்தியாகிரகம் நடைபெற்ற
வேதாரண்யம்  இந்த மாவட்டத்தில்தான் உள்ளது.

பல இஸ்லாமிய இலக்கியங்களைப் படைத்த
குலாம் காதிறு நாவலர்,  நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள  நாகூரில் பிறந்தவர்.

உலகப்புகழ்பெற்ற  வேளாங்கன்னி மாதாகோயில்,
நாகூர் ஆண்டவர் தர்கா,   பாப்பாவூர் தர்கா,
இந்துக்களின் புனித தலமான
வைத்தீஸ்வரன் கோயில்,
திருக்கடையூர் அபிராமி கோயில்,
சிக்கல் சிங்காரவேலர் கோயில்,
இன்னும் பல பாடல்பெற்ற
திருத்தலங்களையும் கொண்டு

மும் மதங்களும் சங்கமித்து
மத நல்லிணக்கத்திற்கு சான்றாக
விளங்கும் மாவட்டம் இது.

குடகுமலையில் தோன்றும்  புண்ணிய காவிரி,
நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள
பூம்புகாரில் தான் கடலில் கலக்கிறது.

பலநூறு சித்தர்களின் வாழிடமாக திகழ்ந்த மயிலாடுதுறை – சித்தர்காடு
நாகை மாவட்டத்திற்கு  புனிதத்தை அளிக்கிறது.

விவசாயத்தையும் ,  மீன்பிடித் தொழிலையும்
இரண்டு முதன்மைத் தொழிலாகக் கொண்டு
நீர்வளம், நிலவளம், கடல்வளம் ஒருங்கே பெற்ற ஒரு உன்னத மாவட்டம்   இந்த மாவட்டம்.

சிலப்பதிகார நீதிக்கு உரியவளான
கற்புக்கரசி கண்ணகியும்,

பொன், பொருள், சுகம், குடும்பம், சுற்றம் அனைத்தையும் இழந்து முற்றும் துறந்த
முனிவராய் முக்காலமும் உணர்ந்த சித்தராய் –

வாழ்க்கைத் தத்துவத்தை கூறிய
பட்டினத்தாரும் பிறந்த மண்
பூம்புகார் என்பதால்
இம்மண்ணின் மீது  மாண்புமிகு
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு
மிகுந்த அக்கறை இருந்ததை
அவருடைய அரசியல் வரலாறு கூறுகிறது.

புரட்சித்தலைவர் முதல்வராக இருந்த போது
ஒரு முறை பூம்புகார் சென்றிருந்தார்.
அங்கு விருந்தினர் மாளிகையில் தங்கியிருந்தார்.  அப்போது சட்டசபை உறுப்பினரான
திரு. விஜயராகவன், தலைவரைச் சந்தித்து
கோரிக்கை மனு ஒன்றை அளித்தார்.
தில்லையாடி என்ற ஊரில் இருந்து
பொறையாறு வழியாக –  திருவாரூருக்கு
பேருந்து விடுமாறு  அந்த மனுவில் அவர் கேட்டிருந்தார்.    மனுவைப் பார்த்த
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்

ஆவன செய்வதாக அவரிடம் கூறினார்.

சட்டசபை உறுப்பினரும்  ஊர் திரும்பிவிட்டார்.

காலையில் மனு அளித்த அவர்,
மாலையில் பொறையாறில்,  டீக்கடை ஒன்றில்
அமர்ந்து  தேநீர் அருந்திக் கொண்டிருந்தபோது
அங்கே திடுமென்று அரசுப் பேருந்து வந்தது.

மாட்டு வண்டிகளும் சைக்கிள்களும் மட்டுமே
ஓடிக் கொண்டிருந்த அந்த வழித்தடத்தில்
திடீரென்று பேருந்து வந்ததும், சட்டமன்ற உறுப்பினர் உட்பட  அங்கிருந்த
அனைவருமே ஒரு கணம்
இன்ப அதிர்ச்சியில் உறைந்து போயினர்.

விரைந்து சென்று ஓட்டுநரிடம் விசாரித்த போது மாண்புமிகு முதல்வர் உத்தரவின் பேரில்
உடனடியாக  புதிய பேருந்து ஒன்றினை
இந்த வழிதடத்தில் இயக்குமாறு
அதிகாரிகள் கட்டளையிட்டதாகக் கூறினார்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் அதிரடி நடவடிக்கையை
பார்த்து அனைவருமே ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்.
அதிரடி  நடவடிக்கைக்கும்,  அவசர உதவிக்கும்
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு நிகர் அவரே தான்.

மாண்புமிகு புரட்சித் தலைவர்  எம்.ஜி.ஆர் அவர்கள்
பெண்களின் காவலராக விளங்கினார்.

அவருடைய திரைப்படங்களாக இருக்கட்டும்,
திரைப் பாடல்களாக இருக்கட்டும்,
அவற்றில் பெரும்பாலான கருத்துக்கள்
பெண்களைப் போற்றுவதாகவும்,
பாதுகாப்பதாகவும்  இருக்கும்.

அதனால்தான் தமிழ்நாட்டில்,  குழந்தைகள் முதற்கொண்டு  மூதாட்டிகள் வரை
அவர் மேல்  அளவிட முடியாத பாசம் வைத்திருக்கிறார்கள்.
பெண்களுக்கு எங்கெல்லாம்

பாதுகாப்பு இல்லையோ அங்கெல்லாம்
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் உதவிக் கரம் நீட்டி ஓடி வருவார் என்பது
தமிழ்நாட்டு மக்கள் அத்தனை பேருக்கும் தெரியும்.
இந்த நாகை மாவட்டத்தில் நடந்த
இன்னொரு சம்பவம் என் நினைவுக்கு வருகிறது.

ஏழைகளும் பணக்காரர்களும் கலந்து வாழும்
இந்த நாகை மாவட்டத்திற்கு பார்த்து பார்த்து திட்டங்கள் வகுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்
அவர்களைப் போலவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும் ஆட்சி பொறுப்பேற்றதும்
நாகை மாவட்டம் ஒரு கடலோர மாவட்டம் என்பதாலும்,
காவிரியை நம்பி விவசாயம் நடைபெறும் மாவட்டம் என்பதாலும், மீனவர்களுக்கும், உழவர்களுக்கும்
மகிழ்ச்சியை அளிக்கக்கூடிய பல கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை செயல்படுத்தினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் வந்த இந்த அரசும் ஆட்சி பொறுப்பேற்றபிறகு
பல திட்டங்களை வகுத்து வழங்கியுள்ளதை
நீங்கள் அறிவீர்கள்!
இன்று இந்த மாவட்டத்தில்
100 கோடியே 23 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 46 பணிகளை
நான் இன்று திறந்து வைத்துள்ளேன்.

மேலும், பல்வேறு துறைகளின் சார்பில்
38 ஆயிரத்து 248 பயனாளிகளுக்கு
281 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு
நலத் திட்ட உதவிகள் வழங்கியுள்ளேன்.

இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து
இன்று வரை மாநிலம் முழுவதும்
நிறைவடைந்த 8 ஆயிரத்து 203 கோடியே
16 லட்சம் ரூபாய் மதிப்பிலான
33 ஆயிரத்து 533 திட்டப் பணிகளை
தொடங்கி வைத்தும்,
3 ஆயிரத்து 130 கோடியே 96 லட்சம்

ரூபாய் மதிப்பிலான 6 ஆயிரத்து 555 பணிகளுக்கு
அடிக்கல் நாட்டியும் உள்ளேன்.

**ஆக மொத்தம் 11 ஆயிரத்து 334 கோடியே**
**12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான**
**40 ஆயிரத்து 88 பணிகள்**
**செயல்படுத்தப்பட்டு வருகின்றன.**

இந்த அரசு கடந்த ஆறு ஆண்டுகளில்
செய்த சாதனைகளை சொல்வதென்றால்
நாட்கள் போதாது.
ஆயினும் நேரம் கருதி
ஒரு சிலவற்றை பற்றி மட்டும்
எடுத்துக் கூற விரும்புகிறேன்.

ஆதனூர் குமாரமங்கலம் பகுதியில்
கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே
400 கோடி ரூபாய் மதிப்பீட்டில்
தடுப்பணை கட்டும் பணி விரைவில் ஒப்பந்தம் கோரப்பட்டு
பணிகள் துவங்கி மக்களுடைய பயன்பாட்டிற்கு வரும் என்பதை
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிக்கல்வித்துறை சார்பில்
96 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
63 ஆயிரத்து 677 மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி
வழங்கப்பட்டுள்ளது.

நாகை மாவட்டம், மயிலாடுதுறையில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக தாய் சேய் நல பிரிவு கட்டிடம் கட்டுப்படவுள்ளது. மற்றும் புதிய சி.டி ஸ்கேன் கருவி நிறுவப்பட உள்ளது.

மயிலாடுதுறை அரசு தலைமை மருத்துவமனையில் எம்.ஆர்.ஐ கருவி
அமைக்கப்படவுள்ளது.
இவ்வாறு குடும்பநலத்துறையின் மூலம் 32.56 கோடி மதிப்பில் பல திட்டங்கள்
செயல்படுத்தப்பட உள்ளது.
டாக்டர் முத்துலட்சுமி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் 80 ஆயிரத்து 525
கர்ப்பிணி தாய்மார்களுக்கு 71 கோடியே 47 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித் துறையின் கீழ்

172 கோடியே 97 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
10 ஆயிரத்து 282 பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ்
174 கோடியே 91 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
15 ஆயிரத்து 836 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

தாய் திட்டத்தின் கீழ்
87 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
6 ஆயிரத்து 312 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மீன்வளப் பல்கலைக்கழகம்
மாண்புமிகு இதய தெய்வம்
புரட்சித் தலைவி அம்மா அவர்களால்
இந்த மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம்
தலைஞாயிறு கிராமத்தில் 72 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மீன்வள பல்கலைக்கழகத்தின்
உறுப்புக் கல்லூரியாக
மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
இந்த ஆண்டில் தொடங்கப் பட்டுள்ளது.

2 பல்கலைக் கழக உறுப்பு கல்லூரிகள்,
ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
ஒரு பொறியியல் கல்லூரி ஆகியவை
இந்த மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளன.

நேரத்தின் அருமை கருதி இங்கே நான் ஒரு சில
திட்டங்களை மட்டும்தான் குறிப்பிட்டுள்ளேன்.
இதற்கு மேலும் பல திட்டங்களை
நீங்கள் கோரிக்கை வைக்காமலேயே
நிறைவேற்ற நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

மக்கள் மனம் அறிந்து திட்டங்கள் தீட்டுவதில் வல்லவரான மாண்புமிகு
புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் வந்தவர்கள் நாங்கள்....

மக்களுக்காக, மக்கள் எதிர்பார்க்கும் திட்டங்களை நிறைவேற்றித் தருவோம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

காலம் அவர்களையும் மாற்றி,
நம்மை புகழ வைக்கும். இதைச் சொல்லும் போது,
மற்றொரு சம்பவத்தை நான் உங்களுடன்
பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்
அவர்கள் தி.மு.க விலிருந்து நீக்கப்பட்டதற்கு
தமிழ்நாடு முழுவதும் போராட்டங்கள் நடந்தன.

அந்த சமயத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர் அவர்கள் நடித்த
'உலகம் சுற்றும் வாலிபன்' படப்பிடிப்பில் வெளிநாட்டில் மும்முரமாக
ஈடுபட்டிருந்தார்.

திமுக பிரமுகர் திரு. மதுரை முத்து அவர்கள்
'உலகம் சுற்றும் வாலிபன் படம் வெளி வந்தால்
நான் புடவை கட்டிக் கொள்கிறேன்' என்று சபதமிட்டார். அது மட்டுமல்ல
மேடைகளில்
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்
அவர்களை கடுமையாக விமர்சித்தும் பேசி வந்தார்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை சந்தித்த தீவிர ரசிகர் ஒருவர்
திரு. மதுரை முத்துவை கண்டபடி ஆவேசமாக பேசினார்.

உடனே மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்கள் ரசிகரைப் பார்த்து
"**தம்பி, முத்தண்ணன் இன்று என்னை**
**கடுமையாக விமர்சிக்கலாம். ஆனால்,**
**ஒரு காலத்தில் கழக வளர்ச்சிக்காக**
**எண்ணற்ற தியாகங்களை செய்தவர்.**
**ஏன் நாளை அவருங்கூட நம் பக்கம் வரலாம்.**
**யாரையும் கண்ணியக் குறைவாக பேசக்கூடாது"** எனக் கூறினார்.

காலப்போக்கில் திரு. மதுரை முத்து அவர்கள் அ.இ.அ.தி.மு.கவில் இணைந்தார்.
பின்னர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் திரு. முத்துவை
மதுரையின் மேயர் தேர்தலில்
நிறுத்தி வெற்றியும் பெற வைத்ததார்.

எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்அறிவுறுத்தியதைப் போல்

நாம் மற்றவரைப் பற்றி பேசுகின்ற போது, விமர்சனம் செய்கின்ற போது
எச்சரிக்கையாக விமர்சனம் செய்ய வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

பலர் மக்கள் மன்றத்திற்கு வராமல்,
மனகோட்டை கட்டிக்கொண்டு –

நான் அதை செய்வேன்....
நான் இதை செய்வேன்....

வானத்தை வில்லாக வளைப்பேன்....
கடல் அலையை நிறுத்துவேன்...
சந்திரனிலும் போய் ஆட்சி அமைப்பேன்....
என்றெல்லாம் பேசி –
அதை மக்களும் நம்புவார்கள் என
நினைக்கிறார்கள்..

உங்கள் மனக்கோட்டை –
கடற்கறையில் கட்டப்படும் மணல்கோட்டை
என்று மக்களுக்குத் தெரியும்.

மக்கள் நலனில் அக்கறையில்லாமல்,
மக்களுக்காக உழைக்காமல்,
கண்களை மூடிக்கொண்டு
கனவு காண்பதை நிறுத்துங்கள்.

**உங்கள் அர்த்தமில்லாத கனவு,**
**உங்களுக்கு ஆபத்தைத்தான் ஏற்படுத்தும்.**
**இதை கூறுகிறபோது எனக்கு**
**கதை ஒன்று நினைவுக்கு வருகிறது.**

ஒரு ஊரில் ஒரு குயவர் சட்டி பானைகள்
விற்கும் கடை வைத்திருந்தார்.
அவருக்கு திருமணம் ஆக வில்லை.
ஒரு நாளைக்கு இரண்டு பானைகள் விற்பதே கடினம்.

ஒரு நாள் ஒருவர் 20 பானைகள்
வேண்டுமென்று பணத்தோடு வந்துவிட்டார்.
குயவர் மகிழ்ச்சியில் மிதந்தார்,

**‘நீங்கள் கடைத்தெருவில்**
**வேலையிருந்தால் முடித்துவிட்டு வாருங்கள்.**
**நீங்கள் எடுத்து போகிற  அளவிற்கு**
**பானைகளைக் கட்டி வைக்கின்றேன்.’**
என்று வந்தவரை அனுப்பிவைத்தார்.

**20 பானைகளையும் எடுத்து –**
**அழகாக அடுக்கி வைத்தார்.**
**பானைக்கு அருகில் அமர்ந்தபடி**
**கற்பனையில் ஆழ்ந்து விட்டார்.**

20 பானைகளை விற்று வரும் பணத்தில்
ஒரு கோழி வாங்க வேண்டும் –

கோழி முட்டைகள் இட்டு –
பல கோழிகளாகும்.
அவற்றை விற்று –
ஓர் ஆடு வாங்க வேண்டும்.
அந்த ஆடு பல குட்டிகள் போடும்,

அதை விற்று  ஒரு கறவை மாடு
வாங்க வேண்டும் –  அந்த கறவை மாடு
கன்று போடும்  –   அதை விற்று
ஒரு மாட்டு வண்டி வாங்க வேண்டும்.
அதில் ஜாம் ஜாம்னு சவாரி போகலாம்.

மாட்டு வண்டியை நல்ல விலைக்கு விற்று
குதிரை வாங்கி சொகுசாக பயணம் செய்யலாம் –
குதிரையும் குட்டிபோடும்.
பிறகு வசதி பெருகிவிடும்,
பிறகு கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்,
குழந்தை பிறக்கும் –
குழந்தை சும்மாயிருக்குமா?

நான் பானை சட்டி செய்யும்போது
பக்கத்தில் வந்து
களிமண்ணில் விளையாடும்.

பணக்கார குழந்தையாயிற்றே
களிமண்ணில் விளையாடுவதா?

இவளுக்கு அறிவே இல்லையா?
குழந்தையைக் கவனிக்காமல்
அப்படி என்ன வேலை,

**“அடியே குழந்தையை தூக்கு”**
**என்று கத்துகிறான். (பகற் கனவில்)**
மனைவி இருந்தால்தானே
குழந்தையை வந்து தூக்குவதற்கு.

**‘அழாதடா மகனே, அம்மா வரட்டும்**
**அவளை இப்படி உதைக்கிறேன்!’**
என்று காலை வேகமாக எதிரே உதைக்க,
ஒன்றின் மேல் ஒன்றாக
அடுக்கி வைக்கப்பட்டிருந்த
அனைத்து பானைகளும்
சரிந்து உடைந்து நொறுங்கின.

**கற்பனைக்கும் ஒரு எல்லை வேண்டும்?**
**பலபேர் இப்படித்தான் கற்பனை செய்து கொண்டு**
**தானும் கெட்டு, தன்னை நம்பியவர்களையும் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.**
**யார் என்று உங்களுக்கு நன்றாக புரியும்.**

இவ்வாறு கற்பனையில் மிதப்பவர்கள்,
தங்கள் கற்பனையை நிறுத்திக் கொண்டு,
தானும் கெட்டு – பிறரையும் கெடுப்பதை
நிறுத்திக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு ஓ.எஸ்.மணியன் அவர்கள் இங்கே அமைக்கப்பட்டுள்ள அரங்கத்திற்கு நீங்கள் வந்து பார்வையிடுங்கள், பார்வையிடும்போது சுமார் ஒரு மணிநேரம் ஆகும் என்றார். மரியாதைக்குரிய நம்முடைய மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் வரவேண்டும். அப்பொழுது நான் வருகின்றேன் என்று சொன்னேன். இருந்தாலும் காலதாமதம் ஆகிவிடும், அதிகமாக போக்குவரத்து நெரிசல் இங்கே ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினாலே, அவர்கள் வருவது சற்று காலதாமதம் ஆகிவிடும், நாம் சென்று பார்த்துவிட்டு வந்துவிடலாம், வந்தவுடன் கூட்டத்தை ஆரம்பித்துவிடலாம் என்று குறிப்பிட்டார்கள்.

அந்த அரங்கத்திற்குச் சென்று அங்கே பார்க்கின்றபொழுது தான் நாம் ஆச்சரியப்பட்டோம். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆண்ட ஆட்சிகாலத்தில் போடப்பட்ட திட்டங்கள் அத்தனையும் அந்த 25 அரங்குகளிலே

நிரம்பி வழிகின்ற காட்சியை நாம் பார்க்க முடிந்தது. ஒவ்வொரு அரங்கத்திற்குள்ளே போகின்றபொழுது, தத்ரூபமாக இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு என்னென்ன திட்டங்கள் கொண்டுவந்திருக்கின்றார்கள் என்று 25 அரங்குகளையும் அமைத்து, அதிலே வைத்திருக்கின்ற காட்சி, மிக சரித்திரம் வாய்ந்த ஒரு காட்சியாக நான் கருதுகின்றேன். ஏனென்று சொன்னால், வாயிலே சொல்வதெல்லாம்கூட மக்கள் மனதிலே நிற்காது, அதைப் பார்க்கின்றபொழுதுதான் அது மனதிலே நிலைத்து நிற்கும். ஆகவே, அப்படிப்பட்ட அற்புதமான திட்டங்கள் இங்கே வருகைபுரிந்திருக்கின்ற, பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவிலே கலந்து கொண்டிருக்கின்ற மக்கள் தெரிந்து கொள்ளவேண்டுமென்பதற்காக இந்த அரங்கிலே அமைத்து அந்த காட்சியெல்லாம் நாம் பார்த்தோம். அவை அனைத்தையும் இன்றைக்கு நாம் நேரடியாக பார்க்கின்றபொழுது, அம்மாவினுடைய ஆட்சியிலே எவ்வளவு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இயற்கையாக காளை வளர்க்கின்ற திட்டம், அந்த இனம் அழிந்துவிடக்கூடாது என்பதற்காக, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இதற்கென்று தனி கவனம் செலுத்தி, அதற்காக காளை வளர்க்கின்ற திட்டத்தினை இந்த மாவட்டத்திற்கு தந்திருக்கின்றார்கள். இந்த அற்புதமான திட்டங்களையெல்லாம் இன்றைக்கு இந்த காட்சியின் மூலம் காண்கின்றோம்.

அடுத்தபடியாக, விவசாயம், மீன்பிடி தொழில் இரண்டையும் நம்பியிருக்கின்ற மாவட்டம், நாகை மாவட்டம். இந்த இரண்டையும் மூலதனமாக வைத்துத்தான் இந்த மாவட்ட மக்கள் வாழ்வாதாரம் இருக்கின்றது. மீன் எப்படியெல்லாம் இருக்கும் என்பதை சுட்டிக்காட்டினார். நான் பார்த்தவுடன், அந்த கடலில் வாழ்கின்ற மீன், அதுபோல் இறால், எப்படியெல்லாம் இந்த பகுதியில் வளம் இருக்கின்றது என்பதை எடுத்துக்காட்டும்விதமாக, இறால் வளர்க்கின்ற திட்டம், இறால் கிட்டத்தட்ட 1 கிலோ ரூபாய் 450க்கு விற்க முடியும் என்று சொன்னார். அந்த இறால் வளர்க்கின்ற திட்டம், அதனை எப்படி செய்யவேண்டும், எப்படி பயன்பெற வேண்டும், எப்படி வளர்த்தால் அதிக இலாபம் கிடைக்கும் என்று தத்ரூபமாக அந்த அரங்கத்திலே வைத்திருக்கின்றார்கள்.

அதற்கடுத்தாற்போல், புரட்சித்தலைவர் பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர் அவர்கள் காளையை அடக்குவது போல ஒரு காட்சி. தத்ரூபமாக வைத்திருக்கின்றார்கள். ஒவ்வொரு துறைவாரியாக அந்த காட்சி அமைக்கப்பட்டுள்ளது. அதற்குப்பிறகு தானியம், எத்தனை வகைகள் இருக்கின்றன என்பதையெல்லாம் அந்த அரங்கிலே பார்த்தோம். ஏனென்றால், உடல் நலம் சிறப்பாக இருக்கவேண்டும். உணவு தானியம் மிகவும் முக்கியம். இயற்கை உணவு தானியம் பயன்படுத்துகின்றபொழுது உடல் நலம் சிறப்பாக இருக்கும். அதற்காக இந்த அரங்கிலே பல்வேறு இயற்கை உணவு தானியம் அத்தனையும் வைக்கப்பட்டிருக்கின்றது. சில உணவு தானியங்களை உங்களில் சிலர் பார்த்திருக்கவேமாட்டீர்கள். ஆகவே, விவசாயப் பெருங்குடி மக்கள் அதை பார்த்து,

பயிரிட்டு இயற்கை உணவை நீங்கள் வீட்டிலே சமைத்து சாப்பிடுகின்றபொழுது உடல் வளம் பெருகும்.

இந்த நூற்றாண்டு விழா என்பது ஒரு கூட்டம் மட்டுமல்ல, இங்கே காலையிலே நம்முடைய மாணவர்களுக்கு நல்ல அறிவுரைகளை வழங்குகின்ற ஒரு கூட்டமாக விளங்கியது. கிட்டத்தட்ட ஒவ்வொரு இடத்திலும் 15,000–லிருந்து 20,000 மாணவர்கள் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவிலே காலையிலே அழைத்து வந்து பல்வேறு ஆக்கப்பூர்வமான கருத்துக்களை அவர்கள் மனத்திலே நிலைநிறுத்துகின்றவிதத்தில், அதன் மூலமாக அறிவுத்திறன் வளர்கின்றது, நல்ல ஒழுக்கம், பண்பு, உயர்வு கிடைக்கின்றது. அப்படிப்பட்ட அற்புதமான கருத்தரங்கை பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவில்தான் நாம் காணமுடிகிறது.

கிட்டத்தட்ட இன்றுடன் 14 இடத்தில் கூட்டம் நடத்திவிட்டோம். 14 இடங்களில் பார்க்கின்றபொழுது, 2.50 இலட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெற்றிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட ஆக்கபூர்வமான, அறிவுபூர்வமான புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்–ருடைய திட்டங்கள், அம்மாவினுடைய திட்டங்கள் இதையெல்லாம் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இந்த நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டு வருகிறது என்பதை கூறிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன். அதுமட்டுமல்ல, சில அரசியல் தலைவர்கள் குறிப்பிடுகின்றார்கள். இதையெல்லாம் அரசியல் மேடையாக பயன்படுத்துவதாகச் சொன்னார்கள். பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய மேடையிலே, அரசியல் பேசுவதாக குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு அரசும், அரசியல் கட்சியை மையமாக வைத்துத்தான் ஆட்சிக்கு வருகிறது. அரசியல் கட்சியில்லாமல் யாரும் அரசு அமைக்க முடியாது. ஒவ்வொரு கட்சிக்கும், கட்சியுடைய வரலாறு, அந்தக் கட்சியிலிருந்து ஏற்பட்ட திட்டங்கள், கொள்கைகளைத்தான், அரசு திட்டமாக வடிவமைக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட திட்டத்தை வடிவமைக்கும்பொழுது, அந்தக் கட்சியைப் பற்றி சிலவற்றைக் கூறித்தான் ஆகவேண்டும். ஏன், இவருடைய ஆட்சியில் கூறவில்லையா ? முன்னாள் முதலமைச்சர், திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுடைய தந்தை, எத்தனை அரசு விழா கூட்டத்தில் பேசியிருக்கிறார் தெரியுமா ? அத்தனையும் எங்களிடம் சநஉடிசன ஆக இருக்கிறது. நாங்களெல்லாம் கொஞ்சம் தான் பேசியிருக்கிறோம். ஆனால், இவர்கள் ஆட்சி அதிகாரத்திலே, முதலமைச்சராக இருந்தபொழுது அரசியல் பற்றி அதிகமாக பேசியிருக்கின்றார்கள். ஆகவே எல்லா கட்சியைச் சேர்ந்த அரசியல் தலைவர்களும் ஆட்சிக்கு வரும்பொழுது, அரசு நல திட்டங்களிலே கலந்து கொண்டு பேசுகின்றபொழுது, அவர்களுடைய கட்சிகள் எப்படி இருந்தன, அந்தக் கட்சிகள் எப்படியெல்லாம் கொள்கை வகுத்தன, அந்தக் கொள்கை மக்களுக்கு எப்படி திட்டங்களாக போய் சேரும் என்பதை எடுத்துக் கூறுவது தான். அதை அரசியலாக நீங்கள் பேசுகின்றீர்கள், அது உண்மையல்ல. பேசுகின்றபொழுது உண்மையைச் சொல்லுகின்றோம், நடப்பதை சொல்லுகின்றோம். அதைச் சொன்னால் இவர்களுக்கு என்ன கோபம் வருகிறது ? இப்பொழுது நடப்பது என்ன ?

நன்றாக சிந்தித்துப் பாருங்கள். வேண்டுமென்றே திட்டமிட்டு சதிவேலை பின்னப்பட்டு கொண்டிருக்கிறார்கள். நாள்தோறும் பிரச்சினை, இந்த ஆட்சியில் என்ன குறை கண்டுபிடித்தீர்கள் ? புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்த ஆறாண்டு காலத்திலே எண்ணற்ற திட்டங்கள் தமிழகத்திற்கு தந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அம்மாவினுடைய அரசு இன்றைக்கு தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அம்மாவினுடைய ஆட்சியில் ஏராளமான திட்டங்களை செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம். **16.2.2017** அன்று நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றோம். கிட்டத்தட்ட இந்த 7 மாதங்களில் பல்வேறு திட்டங்களை தமிழ்நாட்டு மக்களுக்கு வாரி வழங்கியிருக்கின்றோம். அம்மாவினுடைய திட்டங்களை இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். இந்த 7 மாதங்களில், என்றைக்கு பார்த்தாலும், இந்த ஆட்சியை குறை சொல்வது தான் அவர்களுடைய வாடிக்கையாகி விட்டது. ஆட்சியைக் குறை சொல்கின்ற பொழுது நாங்கள் அதற்கு பதில் சொல்கின்ற கட்டத்திலே இருக்கின்றோம். அதற்கு பதில் சொல்கின்ற விதமாகத் தான் சொல்கின்றோமேயொழிய, அரசியல் மேடையாக நாங்கள் ஒருபோதும் பயன்படுத்த மாட்டோம். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். வகுத்த பாதையில், அம்மா வழிவகுத்த கொள்கையில் என்றைக்கும் பிறழமாட்டோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு அரசியல் பேசுகின்றார்கள் என்று சொல்வது தவறு என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சியிலே போடப்பட்ட திட்டம், புரட்சித்தலைவர் ஆட்சியிலே போடப்பட்ட திட்டங்களெல்லாம் காட்சியாக மக்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். எத்தனை பொய் சொன்னாலும், மாறி மாறி பொய் சொன்னாலும் அது உண்மையாகிவிடும் என்று கருதுகின்றீர்கள். அது ஒருபோதும் நடக்காது. நீங்கள் இப்படித்தான் பேசுவார்கள் என்று எண்ணி தான் மரியாதைக்குரிய மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர், இந்த மாவட்டத்தின் மைந்தர், திரு ஓ.எஸ்.மணியன் அவர்கள், இங்கே வந்து பார்த்துவிட்டுச் சொல்லுங்கள், அம்மாவினுடைய ஆட்சியிலே போடப்பட்ட திட்டங்கள் எத்தனை என்பதை பாருங்கள் என்று மக்கள் அறிவதற்காக இந்த அரங்கங்களை அமைத்திருக்கின்றார்கள். ஆகவே, இந்தத் திட்டங்களெல்லாம் மக்களுக்கு போய் சேர்ந்து கொண்டிருக்கின்றன. பொறாமை, பொறுக்க முடியவில்லை, ஆகவே, இந்த ஆட்சி கலைந்துவிடாதா, இந்தக் கட்சி உடைந்துவிடாதா என்று பகல்கனவு கண்டு கொண்டிருக்கின்றார்கள், நிச்சயம் ஒருபோதும் நடக்காது. இந்த அரங்கிலே ஒன்றரை லட்சம் மக்கள் குழுமியிருக்கின்றார்கள். ஆகவே, இந்த மக்கள் அத்தனைபேரும், அம்மாவினுடைய ஆட்சி தொடரவேண்டும் என்று எண்ணி வாழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய வாழ்த்துக்கு முன்னால் உங்கள் கனவு ஒருபோதும் பலிக்காது என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அனைத்திந்திய கழகத்தை அழிக்கின்றவர்கள், இந்த ஆட்சியை கவிழ்க்கின்றவர்கள் எண்ணுகின்ற எண்ணமெல்லாம் இன்றைக்கு பகல் கனவாக ஆகிவிடும் என்பதை சுட்டிக்காட்டுகிறேன். அதுமட்டுமல்ல, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே பல்வேறு திட்டங்களை தந்திருக்கின்றோம். அவ்வளவு திட்டங்களை தந்த காரணத்தினால் தான் மக்கள்

எங்களை நம்புகிறார்கள், மக்கள் எங்களை நம்பி காரணத்தினால் தான் இந்த அரங்கம் நிரம்பி வழிந்து, மக்கள் வெள்ளம் சாலை நெடுகிலும் இன்னைக்கு பார்க்கின்றோம். ஆகவே, ஒரு அரசு நன்றாக் இருந்தால் தான் அந்த மக்கள் பேராதரவு கிடைக்கும். அந்த பேராதரவு எப்படி கிடைக்கும் என்றால், இப்படிப்பட்ட கூட்டத்தின் வாயிலாக பார்க்கின்றபொழுது, இந்த அரசுக்கு மக்கள் பலம் இருக்கிறது என்பதை இந்த நாகை மாவட்டத்தில் நடைபெறுகின்ற கூட்டமே சாட்சி என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அது மட்டுமல்ல, பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.அவர்கள் ஆட்சியிலும் சரி, அம்மாவினுடைய ஆட்சியிலும் சரி, கல்விக்கு மிக முன்னுரிமை கொடுத்தார்கள். இன்றைக்கு இந்த மாவட்டத்திலே மீனவர் சமுதாயம் அதிகமாக இருக்கின்ற பகுதி, அதேபோல விவசாயிகள் நிறைந்த பகுதி. இந்த இரண்டு பகுதியில் இருக்கின்ற மக்களும் உழைக்கின்ற மக்கள். இந்த உழைக்கின்ற மக்களுடைய குழந்தைகள் சிறப்பான கல்வி பயில வேண்டும் என்பதற்காக அம்மா அவர்கள் ஏராளமான திட்டத்தை வகுத்துத் தந்திருக்கின்றார்கள் இந்த மாவட்டத்திற்கு. கல்லூரிகளை கொடுத்திருக்கின்றார்கள், மீன்வளம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே மீன்வளக் கல்லூரியை கொடுத்திருக்கின்றார்கள். ஆகவே அம்மா வழியில் வந்த அம்மாவினுடைய அரசும் அதிக நிதி ஒதுக்கீடு செய்தது கல்விக்கு. ஒரு கல்வி சிறக்கின்றபொழுது அந்த மாவட்டம் சிறந்து விளங்கும். அந்த மாவட்டம் சிறந்து விளங்குவதற்காக அம்மாவினுடைய அரசு, இந்த மாவட்டத்திற்கு புதிய அரசு கலை கல்லூரியை தந்திருக்கின்றது. அம்மாவினுடைய ஆட்சியில்தான் இப்படி திட்டங்கள் அளிக்க முடியும். இதற்கு முன்னால் ஆட்சியில் நடந்தது, என்ன திட்டத்தை கொண்டு வந்தீர்கள்? சொல்லுங்கள் பார்க்கலாம். இந்த ஆட்சி மோசம், மோசம் என்று சொல்கிறீர்களே, இந்த ஆட்சி மோசம் என்று சொன்னால் நீங்கள் கொண்டு வந்தது என்ன திட்டம்? நாங்கள் கொண்டு வந்த திட்டத்தையெல்லாம் நாங்கள் சொல்கிறோம். இன்றைக்கு பள்ளிக்கு செல்கின்ற குழந்தைகளென்றால், 14 வகையான பொருள்கள் வைத்திருக்கிறோம், அந்த அரங்கத்தை போய் பார், அந்த அரங்கத்தை வந்து பார்த்துவிட்டுப் போ. இந்த ஆட்சியிலே என்ன சாதனை, அம்மாவினுடைய ஆட்சியிலே செய்த சாதனைகள் இந்த அரங்கிலே மக்களுடைய பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் ஒன்றும் மறைத்துப் பேசவில்லை. சாதாரண ஏழை குடும்பத்திலே பிறந்த குழந்தைகள் கல்வியில் முன்னுக்கு வரவேண்டும், அந்த மாணவ, மாணவியர்கள் உயர்ந்த கல்விக்கு வரவேண்டுமென்று சொன்னால், அவர்களுடைய அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யவேண்டும். அப்படி பூர்த்தி செய்தால் தான் அந்தக் குழந்தை முன்னுக்கு வரமுடியும் என்று கருதி, தொலைநோக்கு சிந்தனையோடு, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பார்த்து, பார்த்து திட்டங்களை வகுத்து, 14 வகையான பொருள்கள் தந்திருக்கின்றார்கள். காலுக்கு காலணி, பள்ளிக்கு சீருடை, விலையில்லா புத்தகம், பை, Geometry Box, அதேபோல், கல்வி ஊக்கத்தொகை.

நம்முடைய நாகை மாவட்டம் கிராமம் நிறைந்த பகுதி. குழந்தை பள்ளி சென்று படிக்க வேண்டுமென்று சொன்னால் உரிய நேரத்தில் பேருந்து வசதி இருக்காது.

அதன் காரணமாக, அந்த குழந்தை பள்ளிக்கு உரிய நேரத்தில் போக முடியாது, பள்ளி முடிந்தபிறகு வீட்டிற்கு வரமுடியாது. ஆகவே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு, யாருக்கும் வராத சிந்தனை அம்மாவின் மனதிலே ஏற்பட்டது. அதனால் அம்மா அவர்கள் அந்த குழந்தைக்கு சைக்கிள் வாங்கிக் கொடுத்து, இரண்டு, மூன்று கிலோமீட்டர் நடந்து சென்று கொண்டிருந்த அந்த குழந்தை இன்றைக்கு சைக்கிளில் சென்று படித்துக் கொண்டிருக்கின்றது. மனஉளைச்சல் இல்லாமல் படிக்கின்றது. அப்படிப்பட்ட திட்டத்தைக் கொண்டு வந்தது அம்மா. ஆனால், கருணாநிதி முதலமைச்சராக இருந்தபொழுது என்ன செய்தார்? நீங்கள் எல்லோரும் தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள், பரவாயில்லையே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டத்தை இவர் ஏற்றுக்கொள்ளமாட்டாரே, எப்படி சைக்கிள் கொடுக்கின்றாரே என்று பார்த்தால், பெயிண்ட்டை மாற்றிக் அந்த திட்டத்தைக் கொடுக்கின்றார். அம்மா கொண்டு வந்த திட்டம் என்பதற்காக அந்த திட்டத்தை கொடுக்கக்கூட மனமில்லை. அதை மாற்றிக் கொடுக்கின்ற தலைவர் அவருடைய தலைவர். ஆனால் எந்த எதிர்க்கட்சித்தலைவர் ஆட்சிக்கு வந்தாலும் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் கொண்டுவந்த திட்டத்தை மாற்ற முடியாது என்பது வரலாறு. வரலாற்றுச் சிறப்புமிக்க தலைவர்கள் கொண்டுவந்த திட்டத்தை எவராலும் நிறுத்த முடியாது. அப்படி மக்கள் மனதிலே நிற்கக்கூடிய திட்டங்கள். அதுமட்டுமல்ல, விலையில்லா மடிக்கணினி வருடத்திற்கு ஐந்தரை இலட்சத்திற்குமேல் கொடுக்கின்றார்கள். இன்றைக்கு ஏழை மாணவன்கூட உயர்ந்த கல்வி பெறமுடியும். ஏழை மாணவர்களுக்கு ரூபாய் 14,000 மதிப்பு கொண்ட மடிக்கணினி வழங்கப்பட்டு அறிவுப்பூர்வமான கல்வியை இந்த அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் கிடையாது, உலகளவில்கூட கிடையாது, வல்லரசு நாட்டில்கூட அளிக்கப்படவில்லை. புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்கு சிந்தனையோடு, நம்முடைய மாணவச் செல்வங்களுக்கு விஞ்ஞான கல்வி கொடுக்க வேண்டும், தமிழகத்தை விஞ்ஞான மாநிலமாக உருவாக்க வேண்டுமென்பதற்காக மடிக்கணினியை அளித்தார்கள். இந்த நூற்றாண்டு அல்ல, அடுத்த நூற்றாண்டு வந்தாலும் பெயர் சொல்கின்ற திட்டம் இந்த திட்டம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த திட்டமெல்லாம் இவர்கள் கண்ணுக்கே தெரியவில்லை. ஏதாவது ஒரு போராட்டம் நடத்தி இந்த ஆட்சிக்கு இடையூறு கொடுக்க வேண்டும், பிரச்சினையை உண்டாக்க வேண்டும், குழப்பத்தை உண்டாக்க வேண்டும், அதனால் இந்த அரசுக்கு இடர்பாடு ஏற்பாடு ஏற்பட்டு இந்த அரசு கலையாதா? ஒரு போதும் கலையாது. ஏனென்றால் புரட்சித்தலைவி அம்மா என்கின்ற ஆத்மா சுற்றிச், சுற்றி நம்மையும், இந்த ஆட்சியையும், கட்சியையும் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். நீங்கள் எத்தனை அவதாரம் எடுத்தாலும், இந்த இயக்கத்தையோ, ஆட்சியையோ தொட்டுக்கூடப் பார்க்க முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

குடிமராமத்து என்னும் திட்டம் விவசாயிகளின் கனவு திட்டம். இந்த மாவட்டத்தில் விவசாயம் சிறப்பாக நடைபெற வேண்டுமென்பதற்காக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா கண்ட கனவை நனவாக்க வேண்டுமெனபதற்காக குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தை துவக்கி, விவசாயிகள் பங்களிப்போடு இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஏரிகளில் உள்ள வண்டல் மண்ணை விவசாயிகள் இலவசமாக எடுத்து, தங்கள் நிலங்களுக்கு இட்டு அதிக மகசூலைப் பெருக்குவதற்கு அம்மாவினுடைய அரசு திட்டமிட்டு இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, பணிகள் நிறைவுபெறவுள்ளன. இந்தத் திட்டத்தின் மூலமாக தூர்வாரப்படுவதால், இந்தப் பகுதியிலே பருவ காலங்களில் பெய்கின்ற மழைநீரை ஏரிகள், குளங்கள், குட்டைகளில் அதிக நீர் சேமிக்க இயலும். நிலத்தடி நீர் உயர்வதால் விவசாயிகளுக்குத் தேவையான நீர் கிடைக்கின்றது. குடிநீர் பிரச்சினையும் தீர்க்கப்படுகின்றது. இப்படிப்பட்ட அற்புதமான திட்டத்தை இந்த அரசு நிறைவேற்றியிருக்கின்றது.

பொதுப்பணித்துறை மூலமாக, ஆசிய வளர்ச்சி வங்கி திட்டப் பணிகள், அரிச்சந்திரா நதியை நவீனப்படுத்துவதற்காக ரூபாய் 257.74 கோடி, அடப்பாறு ரூபாய் 168.35 கோடி, பாண்டவையாறு ரூபாய் 100.80 கோடி, வெள்ளையாறு ரூபாய் 178.17 கோடி, வளவனாறு வடிகால் 44.62 கோடி, வேதாரண்யம் கால்வாய் ரூபாய் 32.18 கோடி, மின்இறவை பாசனங்கள் ரூபாய் 14.59 கோடி, இப்படி மற்றவை 164.21 கோடி, ஆகமொத்தம் ரூபாய் 960.66 கோடி இந்த மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களின் நன்மைக்காக அம்மா அவர்கள் போட்ட திட்டம். ஒரு நாட்டினுடைய விவசாயி, நாட்டின் முதுகெலும்பாகத் திகழ்கின்றான். அவர்களுக்குத் தேவையானஉதவிகளை வழங்கவேண்டுமென்றுசொல்லி மாண்புமிகு அம்மா அவர்கள் இவ்வளவு திட்டங்களை அறிவித்து, இன்றைக்கு இந்த திட்டங்களெல்லாம் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

**<u>நாகப்பட்டினம் மாவட்ட அறிவிப்புகள்</u>**

- நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடியில் 170 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1054 விசைப்படகுகளும், 6917 கண்ணாடி நாரிழை படகுகளும் பாதுகாப்பாக நிறுத்துவதற்கான வசதி, பிரதான மற்றும் துணை அலை தடுப்புச்சுவர்கள், மீன் ஏலக்கூடம், வலை பின்னும் கூடம், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, அலுவலக கட்டிடம், சாலை வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளுடன் கூடிய நவீன மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும். வரும் நிதியாண்டில் இத்திட்டப் பணிகள் துவக்கப்படும். இத்திட்டத்தினால் தரங்கம்பாடி உள்ளிட்ட

சின்னமேடு, சின்னங்குடி, தாழம்பேட்டை, புதுப்பேட்டை, பெருமாள்பேட்டை, வெள்ளகோவில், குட்டியான்டியூர், சந்திரபாடி மற்றும் சின்னூர்பேட்டை பத்து கிராமங்களில் உள்ள 14,470 மீனவர்கள் பயனடைவார்கள்.

❖ நாகப்பட்டினம் மாவட்டம் வெள்ளப்பள்ளம் மீனவ கிராமத்தில் 152 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 100 விசைப் படகுகள் மற்றும் 1000 கண்ணாடி நாரிழை படகுகளும், பாதுகாப்பாக நிறுத்துவதற்கான வசதி, பிரதான மற்றும் துணை அலை தடுப்பு சுவர்கள், மீன் ஏலக்கூடம், வலை பின்னும் கூடம், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, அலுவலக கட்டிடம், சாலை வசதிகள் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய ஒரு நவீன மீன்பிடி துறைமுகம் அமைக்கப்படும். வரும் நிதியாண்டில் இப்பணிகள் துவக்கப்படும். இத்திட்டத்தினால் காமேஸ்வரம், விழுந்தமாவடி, வானவன்மகாதேவி, வெள்ளப்பள்ளம், நாலுவேதபதி, புஷ்பவனம் ஆகிய 6 மீனவ கிராமங்களைச் சார்ந்த 7,176 மீனவர்கள் பயனடைவார்கள்.

❖ நாகப்பட்டினம் மாவட்டம், ஆற்காட்டுத்துறையில் ஒரு நவீன மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கான சாத்தியகூறு ஆய்வுகள் உடனடியாக மேற்கொள்ளப்படும். இந்த ஆய்வுக்குத் தேவையான நிதி இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தினால் ஆற்காட்டுத்துறை உள்ளிட்ட மணியன்தீவு, கோடியக்காடு, கோடியக்கரை, செருதலைக்காடு, பன்னல், சிந்தாமணிக்காடு, அன்னபேட்டை, கோவில்தாவு, வெள்ளமணல், வாய்மேடு ஆகிய 11 மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் பயன் பெறுவார்கள்.

❖ நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை நகராட்சியில் தற்போது இரண்டு பேருந்து நிலையங்கள் இயங்கி வருகின்றன. இருப்பினும், இங்கு நிலவி வரும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் விதமாக நகராட்சிக்கு அருகே உள்ள மணக்குடி கிராமத்தில் புதிய பேருந்து நிலையம் தனியார் பங்களிப்புடன் (PPP Mode) சுமார் 13.77 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்படும்.

- ❖ நாகப்பட்டினம் மாவட்டத்தில் மழைக்காலத்தில் வீணாகும் உபரிநீரினை சேமிக்கவும், நிலத்தடி நீர்மட்டத்தினை உயர்த்திடும் வகையிலும், கடல் நீர் உட்புகாமல் தடுத்திடும் பொருட்டும்,

    - சீர்காழி வட்டம், காவேரி பூம்பட்டினம், தர்மகுளம் அருகில் காவிரி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணையும்,
    - சீர்காழி வட்டம், திருநகரியில், வெள்ளப்பள்ளம் உப்பனாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணையும்,
    - வேதாரண்யம் வட்டம், ஏகராசபுரத்தில் சக்கிலிய வாய்க்கால் குறுக்கே ஒரு தடுப்பணையும், வரும் நிதியாண்டில் **(2018–2019)** கட்டப்படும்.

- ❖ மேலும் அடுத்த நிதியாண்டில் **(2019–2020),** கீழ்வேளூர் வட்டம், கருவேலங்கடையில் கடுவையாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

- ❖ தஞ்சாவூர், மன்னார்குடி, திருத்துறைபூண்டி, வேதாரண்யம் வழியாக கோடியக்கரையை இணைக்கும் **106.86** கிலோமீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் வழியாக செல்கிறது. இம் மாநில நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்திட மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்படும்.

- ❖ நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை நகராட்சிக்கு **16.880** கிலோமீட்டர் நீளமுள்ள புறவழிச்சாலை அமைக்கப்படும்.

- ❖ நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் காவல் உட்கோட்டத்திலுள்ள திட்டச்சேரி காவல் நிலையம் மற்றும் நாகூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கிராமங்களை பிரித்து பொதுமக்களின் நலன் கருதி

நாகூர் வட்டம் திருக்கண்ணபுரத்தில் ஒரு புதிய காவல் நிலையம் தோற்றுவிக்க இந்த அரசு பரிசீலனை செய்யும்.

அதுமட்டுமல்லாமல், நாகப்பட்டினம் மீனவ பல்கலைக்கழகத்திற்கு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவின் பெயர் சூட்டப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ஓரடியம்புலம் மீனவ கல்லூரிக்கு பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய பெயர் சூட்டப்படும். அதேபோல, புதிதாக துவங்கப்பட்ட சீர்காழி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய பெயர் சூட்டப்படும் என்பதை இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆசியில் இன்றைக்கு பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இங்கே நான் சுட்டிக்காட்டிய அத்தனை திட்டங்களும் நிறைவேற்றப்படும். ஆனால், எதிர்க்கட்சி இன்றைக்கு கேட்கிறார்கள், இந்த ஆட்சியிலே எதுவுமே செய்யவில்லை. சட்டமன்றத்திலே சட்டமன்ற விதி எண். 110–ன் கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எதுவும் செயல்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டை சொன்னார்கள். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட அத்தனை திட்டங்களும், அம்மாவினுடைய ஆட்சியில் பெரும்பாலான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அம்மா மறைவிற்குப் பிறகு அம்மா விட்டுச் சென்ற அந்தப் பணிகள் அனைத்தும் அம்மாவினுடைய அரசு நிறைவேற்றியிருக்கிறது என்று பெருமையோடு இந்த நூற்றாண்டு விழாவிலே குறிப்பிட விரும்புகிறேன் என்று இந்த நேரத்திலே தெரிவித்து, மிக சிறப்பாக, எழுச்சியாக பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் நூற்றாண்டு விழா, சிறக்க அரும்பாடுபட்ட இந்த மாவட்டத்தினுடைய மண்ணின் மைந்தர், மாவட்ட அமைச்சர் திரு ஓ.எஸ்.மணியன் அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய இந்த மாவட்டத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கும் மனமார, உளமாற நன்றியை தெரிவித்து, அதே நேரம் இந்த நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்த மாவட்ட ஆட்சித்தலைவருக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய அரசு அதிகாரிகளுக்கும், இங்கு வருகை தந்திருக்கின்ற அத்தனை உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி,

வணக்கம்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**

*****